**தலைப்பு 245 – அரசாங்க நிதி திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 245 – அரசாங்க நிதி திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க நிதி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க நிதி திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

#### (அ) மதிப்பீட்டினைத் தயாரித்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 03 செலவு விடயங்களின் மதிப்பீடுசெய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததனால் மொத்தமாக ரூபா 2,351,000 தொகை அதாவது 4 சதவீதத்திலிருந்து 492 சதவீதம் வரையான வீச்சில் நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினால் மதிப்பீட்டு எல்லையை மிகைத்து மேலதிக நிதி ஏற்பாடு நி.பி 66 இன் கீழ் மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் தயாரித்தல் வேண்டும். |
| (ii) | 03 செலவு விடயங்களின் தொடக்க மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டுத் தொகை பயன்படுத்தப்படாமையின் காரணமாக ரூபா 1,147,000 மொத்த தொகையானது 26 | மிகுதியான ஏற்பாடானது திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட எதிர்பாராத செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்த செலவுகளுக்காக நி.பி 66 | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் |

| | | |
|---|---|---|
| சதவீத்தததிலிருந்து 61 சதவீதம் வரையான வீச்சுடைய நிதி ஏற்பாடு குறைக்கப்பட்டிருந்தது. | இன் கீழ் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டது. | தயாரித்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 கடமைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 13 நிதியங்களை மூடுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் அவற்றில் 10 நிதியங்களில் காணப்பட்ட ரூபா 1,769,698,149 பணம் திறைசேறியினால் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்த நிதியங்கள் மூடப்பட்டிருந்த போதிலும் மற்றைய 3 நிதியங்கள் சம்பந்தமாக மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தேசிய உயிரியல் பூங்கா நிதியத்தினை ஒரு சுதந்திர நிறுவனமாக மீண்டும் ஸ்தாபிப்பதற்கான வேண்டுகோள் கடிதம் அடிக்கடி சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மாணத்திற்கு இணங்க வழங்கப்பட்ட சுற்றிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிவித்தல், வாகன புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்காக பொருத்தமான சிபாரிசினை சமர்ப்பித்தல் தோட்ட சுயதொழில் சுழற்சி நிதியத்தினை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக முறையான திட்டங்களைத் தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 பாதீட்டு பிரேரணையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் வரைபினை தயாரித்தல் மற்றும் அங்கீகரித்துக்கொள்ளும் செயற்பாடுகள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பூர்த்தியடைந்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | தற்பொழுது வரை தயாரிக்கப்பட்டுள்ள அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் வரைபுக்காக திறைசேரி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள்/ பிரேரணைகளுக்கு இணங்க தேவையான பல திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி இச்செயற்பாட்டிற்குத் தேவையான கொள்கைத் தீர்மானத்தினை எடுத்து தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்காக ஒரு மேற்பார்வைக் குழுவினையும் (Supervisory Committee) தொழில்நுட்ப குழவினையும் (Technical Committee) நியமிப்பதற்கு திறைசேரி செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மேற்பார்வைக் குழுக் கூட்டத்தினையும் தொழில்நுட்ப குழுக் கூட்டத்தினையும் நடாத்தி சட்ட வரைஞருக்கு ஒரு வரைபினை அனுப்புவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பாதீட்டு பிரேரணைகளிலிருந்து எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. மனிதவளங்கள் முகாமைத்துவ்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரித்த பதவிகள் 80 ஆக இருந்ததுடன் அவற்றில் 14 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. அவற்றில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 07 பதவிகளும் மூன்றாம் மட்டத்திலுள்ள 01 பதவியும் இரண்டாம் மட்டத்திலுள்ள 04 பதவிகளும் ஆரம்ப மட்டத்திலுள்ள 02 பதவிகளும் ஆகும். | நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்தாலோசித்த நிரந்தர பதவியணியை மீளாய்வு செய்ததன் பின்னர் சரியான பதவியணியை மறுசீரமைப்புச் செய்வதன் மூலம் சிறந்த ஒரு பதவியணியை பேணுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | முறைப்படியாக நடவடிக்கை எடுத்து அந்த வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது அவ்வாறு தாக்கம் ஏற்படவில்லை யாயின் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |